பெற முடியும். ஆனால் இந்த ஆண்டு நாம் அதைப் பிரித்து விட்டோம். கேரள மாநிலத்தில் இதைப் போன்று கொண்டு வந்து இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலும் இந்த முறையைப் படிப்படியாக பின்பற்ற இருக்கிறார்கள். இருந்தாலும் டி.ஜி.ஓ. படித்தவர்களுக்கு எம்.டி. (ஓ & ஜி) படிக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கக்கூடுமே என்ற அச்சத்தின் காரணமாக, டி.ஜி.ஓ. படித்தால் தான் அதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற திட்டத்தில் உத்தரவு போட்டு இருக்கிறோம். ஆகவே எந்தவிதமான கன்ப்யூஷனும் இல்லை. டி ஜி.ஓ படித்து விட்டால், எம்.டி. (ஓ & ஜி) சேரலாம். அதே மாதிரி எம்.டி. செஸ்ட் டிசீஸ் பொறுத்தவரையில், செஸ்ட் டிசீசில் டிப்ளமோ பெற்றவர்கள் எம்.டி. செஸ்ட் டிசீஸ் படிக்கலாம் என்று வைத்து இருக்கிறோம். இதிலே எந்தவிதமான குழப்பமும் இல்லை.

இப்போது கேள்வியை எழுப்பினார்கள், ஏற்கனவே இந்த டிகிரி படிக்கக்கூடியவர்களுக்கு ஏதாவது பிரச்சினை உண்டா என்று. அவர்களுக்கு எந்தவிதமான பிரச்னையும் இல்லை. அவர்கள் தங்கள் படிப்பை முடித்துவிடலாம். அதிலே பிரச்னை எழவில்லை.

டாக்டர் கே. ஜெளிராஜன்: துணைத்தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என் கேள்வியை சரியாகப் புரிந்துகொள்ள வில்லை என்று கருதுகிறேன். 1981 ஆம் ஆண்டுக்கு முன்னல் 3 ஆண்டு எம்.டி. பட்டப்படிப்புக்கு ஒருவர் சேர்ந்திருக்கிறார். அவரால் எம்.டி. பாஸ் செய்ய முடியவில்லை. அதில் இருக்கிற கஷ்டம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகையால் பல தடவை படையெடுத்து, படையெடுத்து பாஸ் செய்ய முடியாமல் இருக்கிறவர்கள் டி.ஜி.ஓ. பட்டயப் படிப்புக்குச் செல்ல வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவரவர்களே, அது முடியாது. டி.ஜி.ஓ–வுக்கு ஃப்ரஷாகத்தான் போக வேண்டும். இதை ஒரு உதாரணம் மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்க விரும்புகிறேன். முன்பு ஒரு காலத்தில் பி.ஏ. (ஆனர்ஸ்) இருந்தது. இன்டர்மீடியேட் முடித்த பிறகு 3 ஆண்டுகள் படித்து பி.ஏ. (ஆனர்ஸ்) தேர்ச்சிக்குச் செல்ல வேண்டும். பி.ஏ. (ஆனர்ஸ்) படித்த பிறகு அதிலே பாஸ் செய்ய முடியவில்லை என்றால் அவரை பி.ஏ-க்கு எழுது என்று சொல்லமுடியாது; அனுமதிக்கவும் முடியாது. படித்து அதிலே பாஸ் செய்ய முடியாதவர்களுக்கு ஒரு பரிகாரம் செய்யவேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதை தற்போது ஏற்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

மேட்டூர் கால்வாயிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் வழங்குவது.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 106–ன் கீழ் நான் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை அவையில் வைக்க விரும்புகிறேன் :

"எள் பயிரிடுவதற்காக இம்மாதம் (பிப்ரவரி) 17-ம் தேதியில் இருந்து ஏப்ரல் மாதம் 21-ம் தேதிவரை மேட்டூர் கால்வாயில் தண்ணீர் வழங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும் தஞ்சாவூரில் தாளடி நெற்பயிர்களுக்காக மேட்டூர் நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் வழங்குவதை இம்மாதம் 15-ம் தேதிக்குமேல் 28-ம் தேதிவரை நீட்டிக்கவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

சாத்தனூர் அணையையும் மேலும் ஒரு மாதத்திற்கு திறந்து மேற்கு பகுதிக்குத் தண்ணீர்விட அரசு ஒப்புதல் அளித்துள்ளது".

5. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

அ. பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் வேண்டும்."

திரு துரைமுருகன்: துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்கள் மொழிந்திருக்கின்ற பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தினுடைய வருமானத்தில் பெரும்பகுதி-ஃபினான்ஷியல் ரீசோர்ஸஸ், நிதி ஆதாரத்தில் பெரும்பகுதி நமக்கு இந்த விற்பனை வரி மூலம்தான் கிடைக்கிறது. அதை கண்டுபிடித்துக் கொடுத்தார்கள். அது ஒரு காமதேனுவாக இருக்கிறது. ஆனால் அதிலே எவ்வளவுக்கு வரி போட முடியுமோ அவ்வளவுக்கு வரி போட்டு, கசக்கிப் பிழிந்து விட்டார்கள் இனிமேல் அந்த காமதேனு இரண்டு சொட்டு கூட கறக்க முடியாமல் ஓய்ந்து போய் இருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. சென்ற ஆண்டு ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவிலே நீங்கள் டெல்லிக்கு சொல்லியிருக்கிறீர்கள். அதிலே சேல்ஸ் டாக்ஸ் என்ற முறையில் இனிமேல் வரியே போடமுடியாது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகையால் இப்போது இந்த சர்க்காருக்கு பணம் வேண்டும் என்பதற்காக நுணுக்கி, நுணுக்கிப் பார்த்து எங்கெல்லாம் பணம் கிடைக்கும் என்று பார்த்து, ஒரு முனை வரியில் வருமா, பலமுனை வரியில் வருமா என்று பார்த்து, ஒன்றைப் போட்டால் வியாபாரிகள் ஒப்புக் கொள்கிறார்கள்; இரண்டைப் போட்டால் நாங்களே போடுகிறோம் என்கிறார்கள் என்று சொல்கிறார்கள் நம்முடைய அமைச்சரவர்கள்.

---

* 1981 ஆகஸ்டு 22-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.